Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 314

வெள்ளிக்கிழமை 06 ஒக்ரோபர் 2023

புரட்டாசி ... - வள்ளுவர் ஆண்டு ...54



# நாட்டைவிட்டு வெளியேறல்: சிந்தித்து முடிவெடுங்கள்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 6**

**நாட்டை, பொருளாதாரச் சவால்களிலிருந்து மீட்டெடுத்து போட்டித்தன்மைமிக்க பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்காக மனிதவளத்தை ஒன்றுதிரட்டவேண்டும். சவால்களுக்கு மத்தியில் நாட்டை விட்டுச் செல்வதா? இல்லையா? என்பதை அறிவார்ந்த சமூகம் சிந்திக்க வேண்டியது அவசியம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

»15



அமெரிக்காவையே அலறவிட்ட

## ஷோம்பி போதை இலங்கைக்குள்!

மனிதர்களை நடைப்பிணமாக்கும்

கொழும்பு, ஒக். 6
அமெரிக்காவின் பிடடெல்பியா மாநிலத்தை 'அலறவிட்டுக் கொண்டிருக்கும்' ஷோம்பி போதைப்பொருள் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளது. இது ஹெரொய்னை விடவும் 50 மடங்கு ஆபத்துமிக்கது என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

»15

## வெளிநாட்டு மருத்துவர்களுக்கு இலங்கைக்குள் இடமேயில்லை

சுகாதார அமைச்சர் கதவடைப்பு

கொழும்பு, ஒக். 6
இலங்கையில் மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர் என்பதற்காக வெளிநாட்டு மருத்துவர்களைச் சேவையில் ஈடு

»15

## இடியன் துப்பாக்கிகள் கேப்பாபிலவில் மீட்பு!

முல்லைத்தீவு, ஒக். 6
முல்லைத்தீவு, முள்ளியவளை, கேப்பாபிலவு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து இரண்டு இடியன் துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

»15

## பொருள்களின் விலை எகிறும்

மத்திய வங்கியின் ஆளுநர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 6
சர்வதேச நாணயநிதியத்தின் உடன்பாட்டை முழுமைப்படுத்துவதற்காகச் சில பொருள்கள் மீதான வரிகள் அதிகரிக்கப்படலாம். இதனால் அந்தப் பொருள்களின் விலைகள் அதிகரிக்

»15

என்னைக் கேவலப்படுத்தினால்

## கன்னத்தில் அறைவேன்

டயானா கமகே எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 6
என்னையோ அல்லது இதர பெண்களையோ கேவலப்படுத்தினால் கன்னத்தில் அறைவேன் என எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இராஜாங்க அமைச்சர் டயானா கமகே எச்சரிக்கை விடுத்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார

»15

## தவணை விடுமுறை டிசெ. 22 ஆரம்பம்!

கொழும்பு, ஒக். 6
உயர்தரப் பரீட்சை ஜனவரியில் நடைபெறுவதால் டிசெம்பர் மாத பாடசாலை விடுமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் பிரகாரம் பாடசாலைத் தவணை விடுமுறை டிசெம்பர் 22ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

»15

## தலைமன்னார் - இராமேஸ்வரம் பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பம்

இலங்கையும் பச்சைக்கொடி

கொழும்பு, ஒக். 6
தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவையை நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தியப் பயணத்தின்போது அந்த நாட்டு துறைமுக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இது தொடர்பில்

»15

## வட்டி வீதம் குறைப்பு!

கொழும்பு, ஒக். 6
இலங்கை மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை ஒரு வீதத்தால் குறைத்துள்ளது. செப்ரெம்பர் மாதம் பண வீக்கம் குறைவடைந்ததையடுத்தே மத்திய வங்கி தனது வட்டி வீதத்தைக் குறைத்துள்ளது. குறைக்கப்பட்ட வட்டி வீதங்களின் பிரகாரம்

»15

## ஒரு பொம்மேரியன் நாய் இரண்டு எஜமானர்கள்!

கிளிநொச்சியில் விசித்திர வழக்கு

மரபணுவைச் சோதிக்குமாறு கிளி. நீதிமன்றம் கட்டளை!

யாழ்ப்பாணம், ஒக். 6
பொம்மேரியன் இன வளர்ப்பு நாய்க்கு இரு தரப்பினர்கள் உரிமை கோருவதனால், அதன் பரம்பரையின் மரபணுவைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுமாறு நீதிமன்று கட்டளையிட்டுள்ளது. கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கிளிநொச்சியில் உள்ள குடியிருப்பாளர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் வளர்ப்பு

»15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம் முன்னேற்றம்: அரசாங்கம் பொய்ப்பரப்புரை

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.6

**சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியால் இலங்கையின் கடன் சுமையில் ஒரு டொலரேனும் குறையவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டம் மீதான தீர்மானம் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக வங்கியைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் பொருளாதாரம் சிறப்பாக உள்ளது என்று கூறினாராம். அப்படியென்றால் அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம்.

நாட்டின் பண வீக்கம் 70 வீதமாக இருக்கும் போது 12 ரூபாவுக்கு இருந்த முட்டை விலை இப்போது பணவீக்கம் குறைவடைந்துள்ள போதும் 45 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. பொருளாதாரம் வீழ்ந்துள்ள நேரத்தில் எப்படிப் பொருளாதாரம் உயர்ந்துள்ளது என்று கூற முடியும்.

நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரித்துச் செல்கிறது. எரிபொருள் விலை, எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போது மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நாட்டின் பணவீக்கம் குறைந்துள்ளது என்று அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

பல சட்டங்களை இந்தச் சபையில் நிறைவேற்றிக்கொண்டீர்கள் எந்தச் சட்ட வரைவைக் கொண்டு வந்து, எந்தச் சட்டத்தை செயற்படுத்தினாலும் மத்திய வங்கி திருடனைப் பிடிக்கவில்லையே. மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மாற்றங்கள் நடக்கவில்லை. இன்னும் பாடங்களை நீங்கள் கற்றுக்கொள்ளவில்லை. முன்னர் செய்த தவறுகளையே செய்கின்றீர்கள் - என்றார். (எ-இ)

**நாட்டின் பண வீக்கம் 70 வீதமாக இருக்கும் போது 12 ரூபாவுக்கு இருந்த முட்டை விலை இப்போது பண வீக்கம் குறைவடைந்துள்ள போதும் 45 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.**

## மதுசாரம் அருந்துவதால் தினமும் 50 பேர் இறப்பு!

### ஆய்வில் தகவல்

கொழும்பு, ஒக்.6

இலங்கையில் தினமும் 50 பேர் மதுசாரம் அருந்துவதால் இறக்கின்றனர் என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 3ஆம் திகதி சர்வதேச மதுசார தடுப்புத் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.


உலகளாவிய ரீதியில் ஒவ்வோர் ஆண்டும் 3 மில்லியன் இறப்புகள் பதிவாவதுடன், பல நோய்கள் மற்றும் விபத்துகள் ஏற்படுவதற்கு மது அருந்துதல் முதன்மைக் காரணமாக அமைகின்றது. அந்தவகையில் இலங்கையில் நாளாந்தம் 50 பேர் மது அருந்துவதால் இறக்கின்றனர்.

மதுசார வரி மூலம் கிடைக்கும் வருவாயைக் கணக்கிடுவதனால் மாத்திரம் அரசின் வருமானத்தைக் கணிக்க முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின்படி, எதிர்வரும் ஆண்டுக்குள் அரசின் வரி வருவாயை அதிகரிக்கவும், மதுசாரத்தின் பயன்பாட்டைக் குறைக்கவும் பணவீக்கத்துக்கு விகிதாசார மதுசார வரிகளுக்கான விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் அரசின் சுகாதாரச் செலவைக் குறைக்கலாம் - என்றுள்ளது. (ச-இ)

## நீதிபதி விலகல்; விசாரணை அவசியம்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவி துறப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் அறிவிப்புத் தொடர்பாக நீதியானதும் நேர்மையானதுமான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

'நீதித்துறை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் செயற்பட வேண்டும். நீதிபதி சரவணராஜா விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி அவரின் பதவி துறப்புக்கான காரணங்கள் கண்டறியப்பட வேண்டும்' என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-இ)



## வடக்கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர் ஆதரவு!

### வடக்கு ஆளுநரிடம் இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பில் வடக்கின் எதிர்கால வளர்ச்சி குறித்தும் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் இந்தியத் தூதுவருக்கு ஆளுநர் விளக்கினார்.

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கும் வடக்கின் அபிவிருத்திக்கும் தங்களின் தொடர்ச்சியான ஆதரவு உறுதி என்று இந்தியத் தூதுவர் குறிப்பிட்டார். (ச-27)

## சிறந்த நிபந்தனைகளை நிறைவேற்றாமையே சிக்கல்!

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

சர்வதேச நாணயநிதியத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு வரி மற்றும் சேவைக்கட்டணங்களை அதிகரிப்பதை மாத்திரம் இலக்காகக் கொண்டுள்ள அரசாங்கம் முன்வைக்கப்பட்ட சிறந்த நிபந்தனை களை இதுவரை நிறைவேற்றவில்லை. அவற்றைச் செயற்படுத்தாமல் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமுடியாது.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் எடுக்கும் சகல தீர்மானங்களையும் எதிர்க்கும் பாரம்பரியமான எதிர்க்கட்சியாக நாங்கள் செயற்படவில்லை. சர்வதேச நாணயநிதியத்தின் பிரதிநிதிகள் நாட்டுக்கு வந்தபோது நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வலியுறுத்தினோம்.

**அதை அரசாங்கம் நன்கு அறியும்.**

சர்வதேச நாணய நிதியத்தால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. நாணயநிதியத்தை குறிப்பிட்டுக் கொண்டு வரி மற்றும் சேவைக்கட்டணங்களை அதிகரிப்பதை மட்டுமே அரசாங்கம் பிரதான இலக்காகக் கொண்டுள்ளது.

நாட்டு மக்களுக்கு நெருக்கடி ஏற்படுத்தாத பல நிபந்தனைகளை சர்வதேச நாணயநிதியம் முன்வைத்துள்ளது. ஊழல் மோசடியால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று மக்கள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**ஊழல் எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.**

ஆனால் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு இதுவரை நியமிக்கப்படவில்லை. எதிர்வரும் நவம்பர் மாதம் 24ஆம் திகதிக்குள் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும். 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குள் தேசிய கணக்காய்வுச் சட்டத்தையும், கம்பனிச் சட்டத்தையும் திருத்தம் செய்ய வேண்டும். இவ்வாறான 16 முக்கியமான சிறந்த நிபந்தனைகளை சர்வதேச நாணயநிதியம் முன்வைத்துள்ளது.

நாட்டு மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் நாட்டுக்காக முன்வைக்கப்பட்டுள்ள பல சிறந்த நிபந்தனைகளை அரசாங்கம் செயற்படுத்தாத காரணத்தால் தான் இரண்டாம் கட்டத் தவணை வழங்கல் இழுபறி நிலையில் உள்ளது - என்றார். (எ-இ)

## 20 கோடி ரூபா நட்டம் தொடர்பான கணக்காய்வு அறிக்கையை கிடப்பில் போட்டுள்ள அரசு!

### நாடாளுமன்றில் எதிர்க்கட்சி கேள்வி

கொழும்பு, ஒக்.6

கணக்காய்வாளர் நாயகம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி இருக்கும் கணக்காய்வு அறிக்கைகளில் 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆனால் அந்த அறிக்கைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அறிக்கைகள் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுத்து சட்டமா அதிபருக்கு அனுப்ப வேண்டும். கணக்காய்வாளர் நாயகம் இதுவரை 10 கணக்காய்வு அறிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கைகளில் நாட்டுக்கு 20 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த நட்டத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களின் பெயர்களையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இந்த அறிக்கைகள் தொடர்பில் எந்தத் தீர்மானமும் மேற்கொள்ளாமல் நாடாளுமன்றத்தில் அவை வைக்கப்பட்டிருக்கின்றன - என்றார்.

இதற்குச் சபைமுதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பதிலளித்தார்.

கணக்காய்வாளர் நாயகத்தால் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி இருக்கும் அறிக்கைகளை கோப் குழுவுக்கு அனுப்பி, அங்கு ஆராய்ந்த பின்னர் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அதன் பின்னர் அவற்றைச் சட்டமா அதிபருக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்போம் என்று அவர் குறிப்பிட்டார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவு அவசியம்!

## நாடாளுமன்றில் ரணில் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.6**

**நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுத்தார்.**

நாடாளுமன்றத்துக்கு நேற்று வந்த ஜனாதிபதி, சபையில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் சரியென்று இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

ஏன் எங்களால் இணைந்து செயற்படமுடியாது? நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கிறது. இந்த நேரத்தில் இரண்டுதரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தாலும், ஆளும் கட்சியாக இருந்தாலும் நாம் அனைவருக்கும் ஒரே அச்சுறுத்தலே உள்ளது.

அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத்திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அவற்றைக் கூறுங்கள்.

ஆனால் யாரும் வேலைத் திட்டங்களை முன்வைக்கவில்லை.

தற்போதைய கொள்கைத் திட்டங்களை இரண்டு தரப்பிலும் உள்ளவர்கள் ஏற்றுக் கொள்வதால் இரண்டுதரப்பினரும் ஒன்றாக வேலை செய்து நாட்டுக்குக் காட்டுவோம் - என்றார். (எ-26)

## ஆட்சி வேண்டாம் பதுங்கும் மஹிந்த

கொழும்பு, ஒக்.6

மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கம் தனக்கு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம், கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக மகா விஹாரைக்குச் சென்ற மஹிந்த ராஜபக்ச வழிபாடுகளின் பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிய தலைமைத்துவத்தின் கீழ் கட்சி முன்னோக்கிச் செல்லவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விசாரணை வேண்டாம் என்று ஜனாதிபதி கூறுகின்றாராரே? என்று அவரிடம் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், "ஆம், அது சரிதான். மக்கள் எதிர்பார்ப்பது இதைத்தான்" என்று பதிலளித்தார்.

ஜனாதிபதியின் கருத்து எவ்வாறு இருந்தது என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, 'சரி, அதுதான் பொருத்தமான கருத்து' என்று பதிலளித்தார்.

அதேவேளை, சில தினங்களுக்கு முன்னர் ஜேர்மன் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இலங்கை சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளாது என்று ரணில் குறிப்பிட்டிருந்தார். (அ-எ-இ)

## நிகழ்நிலைக் காப்புச்சட்டம் மீளப்பெறப்பட வேண்டும்!

### சஜித் வலியுறுத்து

அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு மீளப்பெறப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் அண்மையில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் இல்லாதொழிப்பதற்கு அரசு தயாராகிவருகின்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டவரைவின் பிரகாரம் அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தால், சிறையில் அடைக்க வாய்ப்பு உள்ளது. அப்பிள், அமேசன், கூகுள், மெட்டா, எக்ஸ், புக்கிங்.கொம் போன்றவை இந்தத்திட்டத்துக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவர்கள் நாட்டை விட்டு வெளியேறினால் வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சியடையும். இது சர்வாதிகாரமான - தவறான திட்டமாகும் என்பதனால் இதை திரும்பப் பெறவேண்டும்" - என்றார். (ம-44)

## ரணிலால் பெருமையாம்; பெரமுன புளகாங்கிதம்!

கொழும்பு, ஒக்.6

போர் முடிவடைந்த பின்னர் இலங்கை தொடர்பில் போலியான அறிக்கைகளையே ஐ.நா. மனித உரிமைகள் பேரவை முன்வைக்கின்றது. அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தமையால் பெருமை அடைகின்றோம்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளரான சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரை மஹிந்த ராஜபக்ச முடிவுக்கு கொண்டுவந்த பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை, பொய்யான காரணங்களை உள்ளடக்கிய அறிக்கைகளையே வெளியிட்டு வருகின்றது. அதை நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டி இருந்தோம். எதிரணியில் அப்போது இருந்த தலைவர்கள் அதை ஏற்கவில்லை.

ஆயினும் ஜனாதிபதி தற்போது அந்த நிலைப்பாட்டுக்கு வந்துள்ளமையை இட்டு நாம் பெருமை அடைகின்றோம்.

நாடு மீது பற்று இல்லாமல், அதிகாரத்துக்காக அலையும் தரப்புகளே இலங்கை தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கு போலியான தகவல்களை வழங்கி நாட்டை இரண்டாம் தரத்துக்குத் தள்ள முற்படுகின்றன.

புலிகள் காலத்தில், எமது நாட்டுக்கு சர்வதேச ரீதியில் களங்கம் ஏற்படுத்துவதற்காக புலிகளால் போலியான தகவல்கள் வழங்கப்பட்டன.

அதன்பின்னர் வடக்கில் உள்ள சில தமிழ்க்கட்சிகள் அந்த வேலையைச் செய்துவருகின்றன. ஜே.வி.பி.யும் அவ்வாறு செயற்படுகின்றது - என்றார். (அ-எ-44)

## புதினம் தெரியுமோ?

'**பா**லுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' எண்டமாதிரித்தான் இஞ்ச சிலர் காவல் காக்கிற லட்சணம் இருக்குது. காங்கேன்துறையில் இருக்கிற சிமெந்துத் தொழிற்சாலையிலையும், பக்கத்தில உள்ள துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான காணிக்குள்ளையும் இருக்கிற பென்னம்பெரிய இரும்புச் சாமான்களை களவெடுத்துக் கொண்டுபோய் விக்கிற விளையாட்டு இன்னும் நிக்கேலை. இத்தனைக்கும் ஆமியில இருந்து பென்சன் எடுத்த ஆக்களை சிமெந்துப் பக்டறிக்கு காவல் போட்டிருக்கு. அங்கால துறைமுக அதிகாரசபை நேவியின்ர கடும் கண்காணிப்பில இருக்கு. இவ்வளவு காவலுக்குள்ளையும் எப்பிடி இரும்பு களவு போகுது? ஆத்தில போற தண்ணிதானே, அண்ணை குடி, தம்பி குடி எண்ட கணக்கில, சும்மா கிடக்கிற இரும்புதானே எண்ட நினைப்பில காவலுக்கு நிக்கிற ஆக்கள் கொமிசன் வாங்கிக் கொண்டுதான் இப்பிடி அங்க இருக்கிற இரும்பை அள்ள விடுகினம். இது எல்லாருக்கும் தெரிஞ்சாலும் ஒண்டும் செய்யமுடியாத நிலைமை.

இப்ப கிட்டடியில ஆயிரக்கணக்கான கிலோ இரும்பு களவு போன விசயம் வெளியால கசிஞ்சதால, சி.ஐ.டி. விசாரணை நடத்தச் சொல்லி அரசாங்கம் ஓர்டர் போட்டிருக்கு. இதை இரும்புக்கு காவலா நிக்கிறவை எதிர்பார்க்கேலை. சி.ஐ.டி. விசாரிச்சால் தாங்கள் இரும்புக்களவுக்கு துணையா நிக்கிற விசயம் பப்ளிக் ஆகிடும் எண்டது அவைக்கும் தெரியும். அதால ஒரு வேலை செய்திருக்கினம். கிட்டடியில பொலிஸ் ஸ்ரேசனுக்குப் போய், ஒரு முறைப்பாடு செய்திருக்கினம். 'நேற்றைக்கு இரவு நாலைஞ்சுபேர் வந்து எங்களைக் கட்டிவைச்சுப் போட்டு 800 கிலோ இரும்பை எடுத்துக்கொண்டு போட்டாங்கள்' எண்டதுதான் அந்த முறைப்பாடு. கள்ளர் சரியா 800 கிலோ இரும்பை எடுத்தவங்கள் எண்டு இவை எப்பிடி நிறுத்துப்பார்த்தவை எண்டது பெரிய அதிசயமெல்லோ. அதுவும் ஆமி, நேவி சுத்திக்கொண்டு திரியிற ஏரியாவில வாகனத்தில வந்து, காவலுக்கு நிண்டவையைக் கட்டி வைச்சுப் போட்டு, இரும்பை அள்ளிக்கொண்டு போகினமெண்டால், நாளைக்கு பலாலி எயார்போட்டில நிக்கிற பிளேனையும் உந்த இரும்பு யாவாரிமார் கொண்டு போறதுகூட பெரிய வேலையில்லையே. உது இட்டுக்கட்டின உருட்டு எண்டது சின்னப்பிள்ளைக்குக்கூட தெரிஞ்சும், பொலிஸ்காரர் அந்த முறைப்பாட்டை எடுத்திருக்கினம். இப்பிடி அவை முறைப்பாடு செய்த அடுத்தநாள், அதே பொலிஸ் ஏரியாவில ஒரு வாகனத்தோட அதே 800 கிலோ இரும்பை சிலர் வாகனமொண்டில கொண்டுபோகேக்க பொலிஸ்காரர் பிடிச்சவையாம். ஆனால் பகிடி என்னெண்டால் வெறும் இரும்பையும், அதைக் களவெடுத்தது எண்டு சொல்லி ரண்டு பேரையும் தான் பொலிஸ் ஸ்ரேசனுக்கு பொலிஸ்காரர் கொண்டுவந்திருக்கினம். அப்ப வாகனம்? அதை 'டீல்' பேசி அப்பிடியே வெளியில அனுப்பிட்டினம். ஒரு கடத்தலோ, களவோ நடந்தால் அதில சம்பந்தப்பட்ட வாகனத்தையும் ஒரு சான்றுப்பொருளாப் பொலிஸ் ஸ்ரேசனில கொண்டுபோய் வைக்கவேணும். ஆனால் இரும்போட பிடிபட்ட வாகனத்தை விட முதல்ல ஒரு லட்சம் ரூபா டீல் பேசி, அது சரிவரேலை எண்டதும், றைவரிட்ட இருந்த 55 ஆயிரம் ரூபாவை வாங்கிக் கொண்டு வாகனத்தைப் பொலிஸ்காரர் வெளியில விட்டிட்டினம். இப்ப வாகனத்தில இருந்த இரும்பு, காங்கேசன்துறை சிமெந்து ஆலைக்குள்ள இருந்து களவெடுத்த இரும்பெண்டு பொலிஸ்காரர் சொல்லுகினம். 'இப்பிடித்தான் எங்களைக் கட்டிப்போட்டிட்டு முழு இரும்பையும் கள்ளர் கொண்டுபோட்டாங்கள்' எண்டு சி.ஐ.டி.க்காரரை நம்பவைக்கத்தான், இதோட சம்பந்தப்பட்ட சிலர் முறைப்பாடும் குடுத்து, பிறகு இரும்பு பிடிபடுற மாதிரியும் செய்திருக்கினம் எண்டு சொல்லுப்படுகுது. மலைவிழுங்கி மகாதேவன்கள் மாதிரி இந்த இரும்பு விழுங்கியளும் லேசுப்பட்ட ஆக்களில்லைப் பாருங்கோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 6
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் விசேட விருந்தோம்பல் கற்கை நெறிகளான உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், அறை பராமரிப்பாளர் ஆகிய மூன்று மாத குறுங்காலக் கற்கைநெறிகள் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

மேற்குறித்த கற்கைநெறியில் இளைஞர், யுவதிகள் இணைவதன் ஊடாக அங்கீகாரமுடைய சான்றிதழைப் பெறுவதுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களை 0212227949, 0212211793, 0777161955 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாகவோ அல்லது உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 12/4 கே.கே.எஸ். வீதி (வீரசிங்கம் மண்டபம் 4ஆம் மாடி) யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்துள்ளனர். (ய)



## கைதடி பொதுநூலக சிறுவர் தின நிகழ்வு

கொடிகாமம், ஒக். 6
சிறுவர் தினத்தை முன்னிட்டு கைதடி பொதுநூலகத்தின் சிறுவர் நாள் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதடி சிறுவர் பூங்காவில் இடம்பெற்றது.
ஆசிரியர் க.கஜீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறு வர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.
நிகழ்வில் ஆசிரியர்களான தயாபரி சூரியகுமாரன், சுபத்திராதேவி தனபாலசிங்கம், கைதடி பொது நூலகத்தின் நூலகர், பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-159)

## நாவற்குழி நூலகத்தால் நூலக நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக். 6
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாவற்குழி பொதுநூலத்தால் நடமாடும் நூலக சேவை எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை நடத்தப்படவுள்ளது.
இந்தத் திட்டத்தின் கீழ் நாவற்[illegible] பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கும் முன்பள்ளிகளுக்கும் செ[illegible] நூல் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.
அத்துடன் கைதடி - நாவற்குழி நூலகங்கள் இணைந்து யாழ்ப்பாணப் பொது நூலக அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்புத் தொடர்பான விழிப்புணர்வு நாடகத்தையும் நடத்தவுள்ளது. (ச-159)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். உற்சாகம் பிறக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள்.

### யாழ்ப்பாணப் பல்கலையில்

## மின்னிணைப்பு தகைமை கற்கைக்கு விண்ணப்பம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல்பீடம், மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கைநெறியை களனி கேபிள் நிறுவனத்தின் அனுசரணையுடன் தமிழ்மொழியில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய இந்த மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மின்னியல் தொழில்நுட்பத் துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இந்தக் கற்கைநெறி ஒருவருட காலப்பகுதியைக் கொண்டமைந்தது. பகுதிநேரக் கற்கைநெறியாக மாதத்தின் முதலாவது சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் இடம்பெறும்.
கற்கைநெறிக்கான நேர்முகப்பரீட்சை அறிவியல்நகர், கிளிநொச்சியிலுள்ள பொறியியல்பீடத்தில் இடம்பெறவுள்ளது.
விண்ணப்பங்களை எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ கிடைக்கக்கூடியவாறு 'ஒருங்கிணைப்பாளர், மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ், மின் மற்றும் மின்னணு, பொறியியல் பீடம், அறிவியல் நகர், கிளிநொச்சி' எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைக்கலாம். கடித உறையின் மேல் மூலையில் 'மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கை நெறி' எனத் தெளிவாகக் குறிப்பிடவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-27)

## தொழில்நுட்பவியல் கற்கைக்கு விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஒக். 6
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் இடம்பெறவுள்ள தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கைநெறி தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் இடம்பெறும். கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் 16 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்.
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியும் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.
விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை 'மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்கவேண்டும்.
மேலதிக விவரங்களை 0212222383, 071 4553772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று மாவட்ட முகாமையாளர் இ.திருமுருகன் அறிவித்துள்ளார். (ச)

### 3 தினங்கள்

## யாழ். கலாசார நிலையத்தில் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 6
வடக்கு மாகாண சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 3 தினங்கள் நடைபெறவுள்ளது என்று யாழ்.மாவட்டச் செயலர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.
கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் தேசியதொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்.மாவட்டச் செயலகத்துடன் இணைந்து இந்த வர்த்தகக் கண்காட்சியை நடத்தவுள்ளது.
இந்தக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது. இந்த வர்த்தகக் கண்காட்சியில் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சுமார் 60 தொடக்கம் 80 வகையான உற்பத்தியாளர்கள் பங்குபெறும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
பங்கேற்கவிரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தேசியத் தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் மாவட்ட உத்தியோகத்தரின் 077 4346516 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு பங்குபெற்ற முடியும் என்றும் யாழ்.மாவட்டச் செயலர் மேலும் குறிப்பிட்டார். (ச-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

நீ நூறு வருடம் வாழ்பவனைப் போல் வேலை செய்.
நாளையே இறந்து விடுபவனைப் போல் சிந்தனை செய்
– கண்ணதாசன் –

## மாற்றங்கள் இல்லாத மகாவம்ச நாடு

2015ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தின் பின்னர் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் சர்வதேச நீதிபதிகள், வழக்குத்தொடுநர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறி முறைக்கும், இலங்கை சார்பில் பங்கேற்ற குழுவுக்கு தலைமை தாங்கிய அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இணங்கியிருந்தார். சமகாலப் பகுதியில் அமெரிக்காவுக்குச் சென்று நாடு திரும்பிய அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 'இலங்கை ஒருபோதும் கலப்புப் பொறிமுறைக்கு இணங்காது' என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார். இந்த விவகாரங்களை அப்போது கையாண்டுகொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் பத்திரிகையாளர் சந்திப்பில், அரசாங்கத்தின் இருவேறு முரண்பட்ட கருத்துத் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டதுடன் 'அரசியல் விருப்பு' ஆட்சியாளர்களுக்கு இல்லை என்பது தொடர்பாகவும் கேட்கப்பட்டது. அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அதை மறுத்திருந்ததுடன்' அரசியல் விருப்பு' இல்லாமலா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இணங்கியிருந்தார்கள் என்ற பதில் கேள்வியை எழுப்பியிருந்தார். ஆனால் இறுதி வரை இலங்கை கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை அமைக்கவில்லை. அப்போதைய பிரதமராக இருந்தவர் இப்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க.

இப்போது சில வாரங்களுக்கு முன்னர் 'சனல் – 4' ஊடகம் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பான காணொலியை வெளியிட்டது. இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்காக ராஜபக்சக்களே அதை நடத்தியிருந்தனர் என்ற உண்மையை அது வெளிப்படுத்தியிருந்தது. அந்தக் காணொலி இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் காணொலி வெளியானதும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி கூட, சர்வதேச விசாரணையைக் கோரியிருந்தார். பின்னர் அதிலிருந்து பின்வாங்கியிருந்தார். கொழும்புப் பேராயர் ரஞ்சித் ஆண்டகையும் சர்வதேச விசாரணையைக் கோரிவிட்டு தற்போது அதிலிருந்து நழுவியுள்ளார். காணொலி வெளியானதும் ஏற்படுத்திய அதிர்வலைகளால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கு 3 பேர் கொண்ட குழுவை நியமித்திருந்தார். ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில், முன்னாள் விமானப்படைத் தளபதி மற்றும் மூத்த சட்டத்தரணி ஆகியோரை உள்ளடக்கி குழுவை நியமனம் செய்தார்.

ஆனால் தற்போது ஜேர்மனுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்குள்ள ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில், 'சனல் – 4' ஊடகம் புனிதமானதா? என்ற கேள்வியை முன்வைத்ததுடன் 'சர்வதேச விசாரணைக்குச் சாத்தியமேயில்லை' என்றவாறு பதிலளித்திருக்கின்றார். இங்கே ரணில் விக்கிரமசிங்கவின் 'சனல் – 4' ஊடகம் புனிதமானதா என்ற கேள்வி, அவர் 'சனல் – 4' வெளியிட்ட காணொலி தொடர்பில் ஆய்வு செய்வதற்கு நியமித்த குழுவின் அறிக்கை எப்படியிருக்கப்போகின்றது என்பதை வெளிச்சம்போட்டுக் காட்டியிருக்கின்றது. அரசியல் விருப்பு இல்லாமல் வெறுமனே அப்போது எழுந்த அதிர்வலைகளை சமாளிப்பதற்காகத்தான் அந்தக் குழுவை அவர் நியமித்திருக்கின்றார் என்பது வெள்ளிடைமலையாகவே தெரிகின்றது.

இதே ரணில் விக்கிரமசிங்கதான் நல்லாட்சி காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து இறுதிப்போரின் போதான குற்றங்களுக்கு கலப்பு விசாரணைப்பொறிமுறை வரையில் சென்றவர். அவர் அதை அரசியல் விருப்புடன் அணுகவில்லை என்பது இப்போது பட்டவர்த்தனமாகியுள்ளது. இங்கே ரணில் விக்கிரமசிங்க என்பவர் ஒரு பொம்மை மட்டுமே. இந்த நாட்டின் பௌத்த – சிங்களக் கட்டமைப்பின் கயிற்றுக்கு ஏற்பவே அவர் ஆடுவார். அதில் ஆட்சிக்கு வரும் எவரும் விதிவிலக்குமல்ல. இந்த நாட்டில் ஆள் மாற்றங்கள் ஊடாக ஒருபோதும் நீதி கிடைக்கப்போவதில்லை. ஆட்சிக் கட்டமைப்பையும், அதன் மகாவம்ச மனோநிலையையும் மாற்றவேண்டும். ஆனால் அத்தகைய மாற்றங்களுக்கும் இலங்கைக்கும் வெகுதூரம்.




# பொருளாதார வளர்ச்சி வீதம் அடுத்தாண்டு சாதகமாகுமாம்

## கூறுகிறார் வர்த்தக அமைச்சர்

**கொழும்பு, ஒக். 6**

**நாட்டின் பொருளாதாரத்தை செயற்றிறன்மிக்க வகையில் செயற்படுத்தி தற்போது எதிர்வுகூறப்பட்டுள்ளதன்படி எதிர்வரும் 2024ஆம் ஆண்டில் 0.8 வீதம் அல்லது 1.9 வீதம் வரையிலான சாதகமான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைவோம் என்று வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாம் தற்போது, சர்வதேச நாணயநிதிய வேலைத்திட்டத்தின் இரண்டாவது கட்ட கடன்தொகை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்கான இலக்குகள் தொடர்பிலான மதிப்பீடுகள் கலந்துரையாடப்படுகின்றன. ஒரு சில விடயங்கள் தொடர்பில் கால தாமதங்கள் ஏற்பட்டாலும் கூட, அரசாங்கம் என்ற வகையில் அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுத்துள்ளோம். கடந்த வருடம் இருந்த நிலையைவிட தற்போது நாட்டின் பொருளாதாரம் மீட்சி பெற்று வருகின்றது. 94 சதவீதமாக இருந்த உணவுப் பற்றாக்குறை தற்போது 5.1 வரை குறைக்க எம்மால் முடிந்துள்ளது.

30வீதம், 32 வீதமாக உயர்ந்த வங்கி வட்டி வீதத்தை 15 - 16 வீதமாகக் குறைத்துள்ளோம். தொழில் முயற்சியாளர்களும், வர்த்தகர்களும் எதிர்கொண்ட அழுத்தம் தற்போது நீங்கியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் செயற்றிறன்மிக்க வகையில் செயற்பட ஆரம்பித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட தடையை கட்டம் கட்டமாக நீக்கி வருகிறோம். வாகனங்களை இறக்குமதி செய்வது குறித்தும் கலந்துரையாடியுள்ளோம் - என்றார். (ச-44-26)

**வறட்சி காரணமாக 70 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.**

# உணவுப் பற்றாக்குறை அபாயம்

இலங்கையில் தற்போதுள்ள காலநிலை மாற்றத்தால் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.

உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த நாள்களில் ஏற்பட்ட வறட்சி காரணமாக 70 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன என்றும் விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# கொழும்பில் தாக்குதல் அறிக்கை கோரும் மன்று

கொழும்பில் சில இடங்களை இலக்குவைத்துக் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று வெளியான தகவல் தொடர்பாக முழுமையான அறிக்கையை உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன இந்த உத்தரவை நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளார். (எ-இ)

நாளை 07.10.2023
சனிக்கிழமை
புரட்டாதி 20

சுபநேரம் : 03.02 - 04.32
ராகுகாலம் : 09.02 - 10.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகச் சீரழிவுகளைச் சீர்செய்ய இளையோரை வழிப்படுத்துக



ஜனாதிபதியின் மேலதிக செயலர் இளங்கோவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக். 6

**இன்றைய காலகட்டத்தில் சமூகப் பாதுகாப்பு சீர்குலைந்து காணப்படுகிறது. அதனாலேயே தற்போது பல்வேறு சமூகமட்ட சீரழிவுகள் தலைதூக்கியுள்ளன. இதனை மாற்றியமைக்க இறுக்கமான கட்டமைப்புகளை முன்புபோல் உருவாக்கி இளையோரை நல்வழிப்படுத்த வேண்டும்.**

-இவ்வாறு யாழ்ப்பாணம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிகழ்வில் பிரதம அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இ. இளங்கோவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று பல்வேறு சமூகமட்ட சீரழிவுக்கு அடிப்படைக் காரணம் சமூகக் கட்டமைப்புசிதைந்துபோனமையே. சமூகம் என்பது ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான நோக்கங்களை அடைவதற்காகச் செயற்படும் பல மனிதர்களின் கூட்டே ஆகும்.

அன்றைய காலங்களில் ஒரு அதிபர் அல்லது ஆசிரியர் கிராமங்களிலுள்ள வீடுகளுக்குச்சென்று காலையில் கூடுவார்கள். மக்களை வழிப்படுத்துபவர்களாகத் தீர்க்கமான நல்ல முடிவுகளை எடுத்து சிறந்த சமூகங்களை உருவாக்கினார்கள். மீண்டும் இவ்வாறான இறுக்கமான கட்டமைப்புகள் சமூகங்களில் உருவாக்கப்படவேண்டும்.

அதேபோல் எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டாடுவதன் மூலம் அதனை அடுத்த சந்ததிகளுக்கு ஊட்டவேண்டும்.

கல்வியில் எவ்வாறான சீரமைப்புகளைக் கொண்டு வந்தாலும் ஆசிரியரால்தான் முழுமையான சிறந்த மாணவனை உருவாக்கமுடியும். சமூகத்தில் சவால்களைச் சந்திக்கக் கூடிய மாணவனை உருவாக்குவது ஆசிரியர்களின் கைகளிலேதான் உள்ளது. இதன்மூலம் அவர்களின் எதிர்காலம் சிறந்ததாக அமைவதுடன் கலாசாரச் சீரழிவு, சமூகச் சீர்குலைவு என்பவற்றையும் தடுக்க முடியும் - என்றார். (ச-27)



றோட்டறிக் கழகப் பங்களிப்பில்

## மன்னாரிலுள்ள சிறுமிக்கு இருதய சத்திர சிகிச்சை!

மன்னார், ஒக். 6

கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகத்தின் நிதிப் பங்களிப்பில் மன்னார் முத்தரிப்புத்துறையைச் சேர்ந்த பொருளாதாரம் நலிவுற்ற சிறுமியொருவருக்கு இருதய அறுவைச்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4 வயதுடைய சிறுமிக்கே தமிழ்நாட்டில் இந்த சிகிச்சை வெற்றிகரமாக அளிக்கப்பட்டு நாடு திரும்பியுள்ளார்.

இதற்கான விமான பயணச் செலவினங்களை கொழும்பு மேற்கு றோட்டறிக் கழகம் மேற்கொண்டதுடன் சத்திர சிகிச்சைக்கான செலவினங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த றோட்டறிக் கழகங்களால் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை இத்தகைய தேவையுடையவர்கள் அந்தந்தப் பிரதேச றோட்டறிக் கழகத்தைத் தொடர்பு கொள்வதன் மூலம் பயனடையலாம் என்று றோட்டறிக்கழகம் தெரிவித்துள்ளது. (ச-60,213)



## கடும் காற்றால் வாழைகளில் நோய்

செய்கையாளர் கவலை

யாழ்ப்பாணம், ஒக்.6

தற்போதைய வறட்சியான கால நிலை மற்றும் பருவக்காற்றால் வாழை மரங்களை ஒருவித நோய்த் தாக்கங்கள் பாதிக்கின்றன. அதனால் வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளோம் என்று வாழைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், தற்போது வீசும் கடும் காற்று காரணமாக வாழைமரங்கள் முறிந்து வீழ்கின்றன. அத்துடன் வாழைகளில் 'குருத்தடைப்பு' ஏற்படுவதோடு வாழைக்குலைகளில் 'அழுக்கணவன்' எனப்படும் நோய்த்தாக்கங்களும் ஏற்படுகின்றன.

இதனால் வாழைக்குலைகளின் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு போதிய சந்தைவாய்ப்பின்றி பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளோம் - என்றனர். (ச-17)

## பல்கலைக்குத் தெரிவாகாவிடின் தொழில் தகைமை கற்கைகள்

மன்னார்ப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 6

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சால் நடத்தப்படும் 17 வகையான அடிப்படைத் தொழில் தகைமை கல்லூரிகளில் பாடநெறிகளைக் கற்பதுடன் கற்று முடிந்தவுடன் உடனடியாக அரச, தனியார் துறைகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலையும் உண்டு.

- இவ்வாறு மன்னாரப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் உயர்தரத்தில் உயிரியல், கணிதத் துறைகளைத் தெரிவு செய்து கற்கும் மாணவர்கள் குறைவு. அதனால் வடக்கில் அரச தனியார் சுகாதார, மருத்துவ சேவை நிறுவனங்களுக் குரிய மனித வளங்களுக்குப் பற்றாக்குறை நிலவு கிறது. அவற்றைப் பூர்த்தி செய்ய ஏனைய மாகாணங்களில் தங்கியிருக்கும் நிலைமை எமக்கு உருவாகியுள்ளது.

மறுபுறம் தொழில்வாய்ப்புகளற்ற துறைகளில் உயர்கல்வியை கற்ற பின்னர் வேலைவாய்ப்பின்மை, கடன் சுமைகளால் அழுத்தங்களுக்கு உள்ளாகும் இளையோரின் எண்ணிக்கையும் வடக்கில் அதிகரித்து வருகின்றது.

இந்தமுறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் உயிரியல் துறையில் வடக்கு மாகாணம் அதிகூடிய சித்தி வீதத்தையும் கணிதத் துறையில் இரண்டாவது அதிகூடிய சித்தி வீதத்தையும் பெற்றுள்ளது.

ஒருவேளை பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாக முடியாத மாணவர்கள் சுகாதார அமைச்சால் நடத்தப்படும் தொழில்தகைமை கல்லூரிகளில் தாதியம், நிறைவு காண் தொழில் வல்லுநர் மற்றும் துணைமருத்துவ பாடநெறிகளைக் கற்று உடனடியாக அரச, தனியார் மருத்துவத் துறைகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எனவே இதுதொடர்பில் பெற்றோர், கல்விச் சமூகத்தினர் சிந்தித்து மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக வைத்திருக்க வழிவகுக்க வேண்டும்- என்றார். (ச-60)

## தொற்றுநோய்களைத் தவிர்க்க உணவுப் பாதுகாப்பைப் பேணுக

சாவ. சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக். 6

உணவுப் பாதுகாப்பைச் சரியாகக் கடைப்பிடித்து உணவு, நீர் மூலம் பரவக்கூடிய தொற்றுநோய்களைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் மேலும் குறிப்பிட்டதாவது:

சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்ட அல்லது அசுத்தமான சூழலில் திறந்த நிலையில் பேணப்பட்ட உணவு, பானங்களை உள்ளெடுப்பதனூடாக தொற்றுநோய்களுக்கு பொதுமக்கள் ஆளாகக்கூடும்.

உணவு தயாரிக்கும் மற்றும் கையாளுமிடங்களில் பொருத்தமான உணவுப் பாதுகாப்பு முறைகளை கையாளத் தவறக்கூடாது.

உணவு தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் போதிய தனிநபர் சுகாதாரத்தைப் பேணுதல், திறந்த வெளியில் உணவு தயாரிப்பதைத் தவிர்த்தல், சமைத்த உணவுகளை மூடி வைத்தல், கழிவு முகாமைத்துவத்தை உரிய வகையில் பேணுதல் என்பன மக்கள் ஆரோக்கியமான உணவைப் பெறுவதற்கான சூழலை உருவாக்கும். தொற்றுநோய்களுக்கு பொது மக்கள் ஆளாகக் கூடாது. உணவின் தரத்தை மேம்படுத்தி உயிர்களைப் பாதுகாக்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ச-159)

## கிழக்குப் பல்கலை சித்தமருத்துவ பீடாதிபதியாக மருத்துவர் வ. அனவரதன்

யாழ்ப்பாணம், ஒக். 6

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்துக்கான முதலாவது பீடாதிபதியாக மருத்துவர் வ.அனவரதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் 2008 ஆம் ஆண்டு உருவான சித்தமருத்துவ அலகானது இந்த வருடம் சித்தமருத்துவ பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது.

இந்த நிலையிலேயே அதற்கான முதலாவது சித்தமருத்துவ பீடாதிபதியாக மருத்துவர் வ. அனவரதன் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கிழக்குப் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இங்கு ஆங்கில மொழி மூலமான ஐந்து வருட சித்தமருத்துவ கற்கைநெறியை மூவின மாணவர்களும் பயின்று வருகின்றனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் எதிர்ப்பு இலக்கை நாடு கண்டடையவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஒக். 6**

**இந்த அரசாங்கம் ஊழல் எதிர்ப்புத் திட்ட இலக்குகளை அடையாமையால், பொதுநலன் சார் பணிகள் சரிந்து - சட்டத்தின் ஆட்சி கவிழ்ந்து - ஜனநாயகம் பலவீனமடைந்துள்ளது. அதனாலேயே சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் தவணை கிடைக்கப்பெறாதுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் இரண்டாம் கடன் தவணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துரைக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல் நிறைந்த குடும்ப ஆட்சியே இந்த நாட்டில் இன்னமும் நீட்சியாக நடந்து வருகிறது. இதனால் தான் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன் நாட்டுக்கு கிடைக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான இரண்டாவது கடன் தவணை தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல்கள் சரியான முடிவு எடுக்கப்படாமல் முடிவடைந்துள்ளன.

ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுக்க அரசாங்கம் இலக்குகளை அடையவேண்டும். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? - என்றார். (ச-44)



விவசாய நடவடிக்கைகளுக்காகவும் கால்நடைகளின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் மழை நீரை தேக்கி வைப்பதற்காக ஈச்சமோட்டை மக்கிக்குளத்தை ஆழமாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-17)

# சுயமான தேசமாக மீளெழுவதற்கு தொழில் முயற்சியாளர் ஊக்குவிப்பு

## தொலைநோக்குத் திட்டம் நடைமுறை

கொழும்பு, ஒக். 6

எதிர்பார்க்கும் அபிவிருத்தி இலக்குகளை எட்டி சுயமாக எழுந்து நிற்கும் தேசமாக இலங்கையைக் கட்டியெழுப்ப தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பைப்பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கான அவர்களை வளப்படுத்தும் திட்டங்களை அரசாங்கம் வகுத்து வருகின்றது.

-இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் சனத்தொகையில் 2 வீதம் மாத்திரமுள்ள தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை எதிர்வரும் 5 வருடங்களில் 10 வீதமாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எமது பாரம்பரிய தொழில் முயற்சியாளர்களைப் பாதுகாத்து தொழில்முனைவோராக அவர்களை உருவாக்கும் பணியில் நாம் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் பல்கலைக்கழகங்களிலிருந்து ஏராளமான இளையோர் பட்டம் பெற்று வெளியேறுகிறார்கள். அவர்களைத் தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் வாய்ப்பு மிகவும் குறைவு. இவர்கள் தொழில் முனைவோராகும் வாய்ப்புக் கிடைத்தால் அது நாட்டுக்குப் பெரும் பலமாக அமையும்.

அந்தவகையில் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கு அவர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் வர்த்தக நடவடிக்கைகளின் போது. பிளாஸ்ரிக் பொருள்களுக்கு மாற்றுப் பொருள்களை உற்பத்தி செய்வது அவசியமாகவுள்ளது. அந்தப் பொருள்களுடன். ஏற்றுமதி சார்ந்த பொருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் நவீன உலகுக்கும் நாட்டுக்கும் ஏற்றவகையில் புதிய தயாரிப்புகளை உருவாக்கமுடியும்.

நமது நாட்டில் அறிவுசார்ந்த மனித வளம் உள்ளது. அரசாங்கம் என்ற வகையில் அந்த இலக்கை அடைவதற்கு தொழில்முயற்சியாளர்கள் உருவாக்கப்பட வேண்டும். தேசிய உற்பத்தியை அதிகரிக்கவும் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் அவர்களின் பங்களிப்பு அவசியம். இதன்மூலமே சுயமாக எழுந்து நிற்கும் தேசமாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்- என்றார். (ச-26)

# கிளி. மருத்துவமனையில் மோட்டார்சைக்கிள் திருட்டு

கிளிநொச்சி, ஒக். 6

கிளிநொச்சி மருத்துவமனை வளாகத்தில் நிறுத்தப்பட்ட மோட்டார்சைக்கிளொன்று களவாடப்பட்டுள்ளது. கடந்த 2ஆம் திகதி திங்கட்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை விடுதியில் இருந்த நோயாளி ஒருவரை சுகநலம் விசாரிக்கச் சென்ற ஒருவரின் மோட்டார்சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-113)

# மீசாலை வீரசிங்கம் வித்திக்கு குடிநீர் சுத்திகரிப்புத் தொகுதி

## மோகனதாஸ் சுவாமிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 6

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளின் அன்பளிப்பில் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலைக்கு புதிதாக குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியொன்று அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாடசாலை வளாகத்தில் அதிபர் க. இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு. ஜெகதாசன் பங்கேற்றார்.

குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி அன்பளிப்பாளர் கலாநிதி மோகனதாஸ சுவாமிகள் மற்றும் பிரதம விருந்தினர் ஆகியோர் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதியைத் திறந்து வைத்தனர். (ச-159)



# உள்ளகப்பொறிமுறை இங்கு சரிப்பட்டுவராது

யாழ்ப்பாணம், ஒக். 6

நீதிபதி சரவணராஜாவின் பதவி விலகல் சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியில் தமிழ்மக்கள் எந்தவொரு நீதிப்பொறிமுறைக்கு ஊடாகவும் உரிமைகளைப் பெற முடியாது என்பதைத் தெளிவாக உணர்த்தியுள்ளது. இந்தச் சம்பவத்தின் பின்னரும் உள்ளக நீதிப்பொறிமுறை தொடர்பாகத் தமிழ்மக்கள் தரப்பில் யாராவது கருத்துகளைக் கூறுவார்களேயானால் அவர்கள் மிகவும் வடிகட்டிய முட்டாள்களாகத்தானிருப்பர். சர்வதேச நீதிப்பொறிமுறையே தமிழ்மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான ஒரே வழி எனக் கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் தலைவர் என். இன்பம் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது.

நீதிபதி சரவணராஜா முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகள் சார்ந்து ஒரு நீதியுடன் செயற்பட்டு வந்த நிலையில் அவருக்கு நேரடியாகவும். மறைமுகமாகவும் அரச தரப்பு அச்சுறுத்தல்கள் விடுத்து அவரது பதவிவிலகலுக்குக் காரணமாக அமைந்திருக்கின்றமை தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது. அந்த வகையில் அரச தரப்பின் ஒரு தலைப்பட்சமான. நீதியற்ற இத்தகைய செயற்பாடுகளை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன் - என்றார். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியனை பந்தாடியது நியூஸி.

## நான்கு ஆண்டுகளின் பின் காத்திரமான பழிதீர்ப்பு!




புதுடில்லி, ஒக். 6
உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற இங்கிலாந்து நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், நடப்புச் சம்பியன் இங்கிலாந்தை இலகுவாகத் தோற்கடித்தது நியூஸிலாந்து.
2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண இறுதியாட்டத்தில், பவுண்டரிகள் எண்டப்பட்டு நியூஸிலாந்து தோற்கடிக்கப்பட்டமைக்கு ஆகச்சிறந்த பழிதீர்ப்பை நேற்று மேற்கொண்டது நியூஸிலாந்து.

### ஏன் களத்தடுப்பு?

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அஹமதாபாத்தில் நேற்றையதினம் இரவு பனிப்பொழிவு இருந்தது. இதனால் இரண்டாவதாகப் பந்துவீசுவது மிகவும் சிரமமாக இருக்கும். அத்துடன் உலகின் ஆகப்பெரும் மைதானமாக அறியப்படும் அஹமதாபாத்தின் பனிப்பொழிவு கனதியான தட்பவெப்பச் செல்வாக்கைச் செலுத்துவது தொடர்கதையே. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது நியூஸிலாந்து.

### இங்கிலாந்தின் இன்னிங்ஸ்

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக்கு அதன் ஆரம்ப வீரர்களான பேர்ஸ்டவ், மலன் இணை எதிர்பார்த்த இணைப்பாட்டத்தை வழங்கவில்லை. 40 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 14 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் மலன். சிறிது நேரத்தில் பேர்ஸ்டவின் ஆட்டமும் சான்நெரின் சுழலால் முடித்து வைக்கப்பட்டது. 50 ஓவர்களுக்கான இங்கிலாந்து அணியில் இருப்பாரா? மாட்டாரா? என்று இறுதிவரை விவாதத்துக்குரியவராக இருந்த ரூட்தான் நேற்று இங்கிலாந்தின் முதுகெலும்பாக இருந்தார். நியூஸிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர்களை சிறந்த பின்னங்கால் நகர்த்தல் மூலம் அவர் தடுத்தாடினார். 57 பந்துகளில் ரூட் அரைச்சதம் கடந்தார். ஆனால் மறுமுனை பலவீனமாகவே இருந்தது. ஹரி ப்ரூக் 25, மொய்ன் அலி 11 என வருவதும் போவதுமாக இருந்தனர். 42 பந்துகளில் 43 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார் பட்லர். பட்லர் ஆட்டமிழந்த சில நிமிடங்களில் ரூட்டை வெளியேற்றினார் பிலிப்ஸ். 77 ஓட்டங்களைப் பெற்றார் ரூட். முடிவில் 9 விக்கெட்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது இங்கிலாந்து.
பந்துவீச்சில் ஹென்றி 3 விக்கெட்களையும், சான்நெர், பிலிப்ஸ் இருவரும் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

### நியூஸிலாந்தின் இன்னிங்ஸ்

300 பந்துகளில் 283 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களின் இணைப்பாட்டம் பத்தே ஓட்டங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை பேரிடியாய் இறங்கியது. சாம்கரனின் பந்துவீச்சில் 'கோல்டன் டக்' முறையில் வீழ்ந்தார் வில் ஜங். பிறிதொரு ஆரம்ப வீரரான கொன்வே, இளம் அதிரடி வீரரான ரிச்சன் ரவீந்திரா இருவரும் இணைந்து இங்கிலாந்தின் அனுபவப் பந்துவீச்சு வரிசையைப் புரட்டியெடுத்தனர். பயிற்சி ஆட்டத்தில் விளையாடுவதைப்போல பதற்றம் ஏதுமின்றி அவர்களின் ஆட்டத்தில் நேர்த்தி இருந்தது. இங்கிலாந்தின் அணித்தலைவர் பட்லர் செய்யாத முயற்சிகள் இல்லை. ஆனால் இணைப்பாட்டத்தைப் பிரித்தபாடில்லை. 83 பந்துகளில் கொன்வே சதம் கடந்தார். ரிச்சன் ரவீந்திராவின் சதம் 82 பந்துகளில் பதிவானது. இணைப்பாட்டம் தொடர பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் 82 பந்துகள் மீதமிருக்க இலக்கை




அடைந்து வெற்றிபெற்றது நியூஸிலாந்து.
கொன்வே 152 ஓட்டங்களுடனும், ரிச்சன் ரவீந்திரா 123 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். ரிச்சன் ஆட்டநாயகனானார். (ம)






# ஆட்டம் இங்கே ஆள்கள் எங்கே?

புதுடில்லி, ஒக். 6
உலகக்கிண்ணத் தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில், இந்த ஆட்டத்துக்கான பார்வையாளர் வரவு தொடர்பில் பெரும் விவாதம் ஏற்பட்டுள்ளது.
நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் உலகக்கிண்ணம் என்பதாலும் பெருமளவான பார்வையாளர்கள் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. பார்வையாளர்களின் வருகையைக் கருத்திற்கொண்டே சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் பேர் அமரக்கூடிய குஜராத் நரேந்திர மோடி மைதானத்தில் ஆட்டம் நடத்தப்பட்டது. ஆனால், மைதானத்தின் இருக்கைகளில் 20 வீதமான இருக்கைகள் கொள்ளக்கூடிய வகையிலேயே நேற்று பார்வையாளர்கள் வந்திருந்தனர். இதையடுத்து இது தொடர்பில் காரசாரமான விவாதம் சமூக வலைத்தளங்களில் இடம்பெற்று வருகின்றது. (ம)

# கண்ணாடியத்திருப்பினா வண்டி ஓடுமா ஜீவா?

புதுடில்லி, ஒக். 6
இலங்கை அணித்தலைவர் டசுன் சானக தனது ஜெர்சியின் இலக்கத்தை மாற்றியுள்ளாராம்.
இதுவரை 7ஆம் இலக்க ஜெர்சியை அணிந்து விளையாடிய டசுன் தற்போது தனது ஜெர்சியில் மூன்றாம் இலக்கத்தை அணிந்து விளையாடவுள்ளார்.
ஆட்டத்தில் கவனம் செலுத்தி ஆடுவதை விடுத்து, ஜெர்சி இலக்கங்களை மாற்றுவதால் என்ன மாற்றம் நிகழ்ந்துவிடப்போகின்றது. கண்ணாடித் திரும்பினா வண்டி ஓடுமா ஜீவா? இதுதான் இப்போது டசுனை நோக்கி எழுப்பப்படும் கேள்வியாம். (ம)

# அஸ்வினுக்கு 'ஸ்கெட்ச்'




புதுடில்லி, ஒக். 6
உலகக்கிண்ணத் தொடரில் ஞாயிறன்று இடம்பெறும் ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் அஸ்வினை எவ்வாறு எதிர்கொள்வது என்பதே அவுஸ்திரேலிய அணியின் பிரதான தலைவலியாக உள்ளதாம்.
அஸ்வினை எதிர்த்து விளையாடுவதற்காக அஸ்வினைப்போலலே பந்துவீசும் இந்திய இளம் வீரரை வலைப்பயிற்சிப் பந்துவீச்சாளராக அவுஸ்திரேலிய அணி அழைத்துள்ளது. ஆனால் இந்த வாய்ப்பை அந்த வீரர் மறுத்துள்ளார்.
முன்னதாக டெஸ்ட் தொடரொன்றில் இந்தியாவை எதிர்ப்பதற்காக அவுஸ்திரேலிய அணியின் வலைப்பயிற்சிப் பந்துவீச்சாளராக அவர் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையைத் துவைக்க அனுபவம் கைவசம்!



உலகக்கிண்ணத் தொடரில் நாளை இடம்பெறும் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெறும் என்று அந்த அணியின் நட்சத்திர வீரரான வான் டெர் டஸன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் துடுப்பாட்ட வரிசையாக இணைந்து கடந்த சில ஆண்டுகளாக விளையாடி வருகிறோம். அதனால் ஒவ்வொரு வரும் அடுத்தவரின் ஆட்டத்தை நன்கு அறிவோம். அதனால் ஆட்டத்தின் சூழலுக்கு ஏற்ப எங்கள் ஆட்டத்தை எப்படி முன்னெடுத்து செல்வது? என்பது குறித்த புரிதலைப் பெற்றுள்ளோம். அதற்கு ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான தொடர் எங்களுக்கு உதவியது. அதேபோல இந்தியாவில் ஐபிஎல் தொடரில் விளையாடிய அனுபவம் எங்கள் அணி வீரர்களுக்கு பெரிதும் கைகொடுக்கும். அது முக்கியமானதும் கூட. ஏனெனில், இந்தியாவின் பல்வேறு மைதானங்களில் நாங்கள் விளையாட உள்ளோம். இந்த இடங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான சூழலை கொண்டுள்ளன. டெல்லி, சென்னை, ஹைதராபாத் நகரங்களில் விளையாடிய அனுபவம் எங்கள் வீரர்களுக்கு உள்ளது - என்றார். (ம)

## எங்கள் வீட்டில் எல்லா நாளும்!



புதுடில்லி, ஒக். 6

உலகக்கிண்ணத் தொடரில் நாளைமறு இந்தியா - அவுஸ்திரேலிய அணி சென்னை சேப்பாக்களம் மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ள நிலை இந்த ஆட்டத்துக்காக வருகை தந்துள்ள திய அணி வீரர் ஜடேஜா 'தன்னுடைய வீட்டில் உள்ளேன்' என்றவாறாக சமூக வலைத்தளத்தில் பதிவை மேற்கொண்டுள்ளார்.

ஐ.பி.எல். தொடரில் கடந்த பத்து ஆண்டுகளாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிவரும் ஜடேஜா 'சென்னை என் இரண்டாவது வீடு' என்று இதற்கு முன்னர் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## சச்சினுக்குக் கௌரவம்



புதுடில்லி, ஒக். 6

உலகக்கிண்ணத் தொடர் நேற்றையதினம் ஆரம்பித்துள்ள நிலையில், இந்தத் தொடருக்கான கிண்ணத்தை அறிமுகப்படுத்தி 'மைதானப் பார்வைக்காக' வைத்தார் சச்சின் ரெண்டுல்கர்.

நடப்பு உலகக்கிண்ணத் தொடருக்கான சர்வதேசத் தூதுவராக சச்சின் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 2023 உலகக்கிண்ண் தொடர்

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு**

நெதர்லாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இன்றைய (06.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

### நிபந்தனைகள்

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும். ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் 0767374444 என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

**இன்றைய ஆட்டம்**

நெதர்லாந்து - பாகிஸ்தான்

இடம்: ஹைதராபாத்

நேரம்: பி.ப. 2.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தில் அண்மையில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது. பாடசாலைச் சமூகத்தினர், கிராம மட்ட உத்தி யோகத்தர்கள் எனப் பலர் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ச-66)



## சாதனையாளர் கௌரவிப்பு

மன்னார் மடு கல்வி வலயத்தில் இந்த ஆண்டுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற் றோர் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர் கர் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மடு கல்வி வலயத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. (ச-56)



முல்லைத்தீவு மாவட்டத் தில் இயங்கி வரும் வி.பி. பவுண்டேசன் நிறுவனத்தி னால் பெண்கள் மற்றும் பொருண்மியம் நலிந்த மக் களுக்கான வாழ்வாதார நிதி உதவி வழங்கும் நிகழ்வு புதுக்குடியிப்பு- கைவேலி பெண்கள் தொழில் முயற் சியாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஒருங்கிணைப் பாளர் வே.கரிகாலன் தலை மையில் அண்மையில் நடை பெற்றது. (ய-19)



கச்சாய் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பொருளா தாரம் நலிவுற்ற 10 மாணவர்களுக்கு அமரர் வீரசிங்கம் சரஸ்வதி ஞாபகார்த்தமாக அவரது உறவினரால் சைக் கிள்கள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (ச-159)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயத் துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியும், இதே பாடசாலையில் மூன்று மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் கொள்வனவு செய்வதற்கான நிதியும் விபுலானந்தாக் கல் லூரியில் கல்வி கற்கும் மாணவி, திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கு துவிச்சக்கரவண்டிகளும், மல் லிகைத்தீவு தங்கமுருகன் ஆலயக் கட்டடப் பணிகளுக்கான நிதியும், உதயபுரி பிரதேசத்தில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலைக் கட்டடப் பணிகளுக்கான நிதியும், கன்னியா பீலியடிப் பிரதேசத்தில் அமைந்துள்ள நடன காளி அம்மன் ஆலயக் கட்டடப் பணிகளுக்கான நிதியும் அண்மையில் வழங்கப் பட்டன. (ய-66)



## கண் பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்

கிளிநொச்சி - முல்லைத்தீவு படையினரின் ஏற்பாட்டில் முல் லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதே சசெயலக பிரிவுக்குட்பட்ட உடையார் பகுதியில் கண் பார்வையற்றவர்களுக்கு அண்மையில் உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் தாய்லாந் தில் இருந்து வருகைதந்த சுஜி பௌத்த சங்கக் குழுவினரால் கண் பரிசோதனை செய்து கண் ணாடிகள் வழங்கப்பட்டன. (ய-113)




மாகாண மட்ட எறிபந்துப் போட்டியில் தேசிய மட்டத்துக்கு தெரிவான கிளிநொச்சி அக்க ராயன் மகா வித்தியாலய மாணவர்கள் [illegible] னர். (ய-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் இடம்பெற்ற மாணவர்களின் புத்தாக்கத் திறனை வெளிப்படுத்தும் கண்காட்சி நிகழ்வின் காட்சிகள். (ய)



புங்குடுதீவு அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒன்றியத்தினரால் புங்குடுதீவு மத்திய கல்லூரியில் கற்கும் ஐந்து மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைக்கப்பட்டன . (ய)




நெடுந்தீவுப் பகுதியில் பூமணி அம்மா அறக்கட்டளையின் ஸ்தாபகத் தலைவரான வேலணை மேற்கைச் சேர்ந்த விசுவாசம் செல்வராசாவின் நெறிப்படுத்துதலில் நிரந்தர குழாய் இணைப்புக் குடிநீர்த் திட்டத்தினைப் பெறும் வகையில் குடும்பமொன்றிற்குப் 15 ஆயிரம் ரூபாப் படி 15 குடும்பங்களுக்கும் 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியுதவி கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை நெடுந்தீவு மத்திப் பகுதியில் அமைந்துள்ள தனியார் இல்லமொன்றில் வைத்து வழங்கப்பட்டது. (ய-66)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குப்பிழான் தெற்கு கிராமியச் செயலகத் திறப்பு விழா குப்பிழான் விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் நடைபெற்றது.
இதேவேளை குப்பிழானைச் சேர்ந்த புலம்பெயர் வாழ் அன்பர்கள் நால்வரின் நிதிப் பங்களிப்பில் பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ய-66)

அச்சுவேலி வளலாய் அமெரிக்கன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் பொருளாதார நலிவுற்ற 36 குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பூமணி அம்மா அறக்கட்டளையால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (ய-66)





சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் திருநாளைப்போவர் நாயனார் குருபூஜை விழா தெல்லிப்பழை பன்னாலை திருவருள்மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய)

மன்னார் மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முஸ்லிம் இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் முகமாகவும் சமூக மட்ட பிரச்சினைகளுக்கு எதிராக முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கான விசேட பயிற்சி வழங்கும் நிகழ்வு ஆஹாஸ் தனியார் விருந்தினர் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது. (ய-213)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைவேலியில் புத்தகக் கண்காட்சி

யாழ்., ஒக். 6

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேசசபைக் குட்பட்ட கட்டைவேலிப் பொதுநூலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு புத்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

பிரதேசசபையின் செயலாளர் கணேசநாதன் கம்ஸநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறைத் தலைவர் கலாநிதி கிட்டிணபிள்ளை சண்முகநாதன், சிறப்பு விருந்தினராக 'எங்கட புத்தகங்கள்' அமைப்பின் நிறுவுநர் குலசிங்கம் வசீகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-66)


## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 03 . 05 . 1932

ஆண்டவன் அடியில் 08 . 09 . 2023

கடந்த (08.09.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த எமது அன்புத்தாயார்

### திருமதி தம்பிப்பிள்ளை மாணிக்கம்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (06.10.2023) வெள்ளிக்கிழமை காலை 7:00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் அவரது இல்லத்திலும் இடம்பெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் பல்வேறு முறைகளில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனைத்து வகையிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அனைவரும் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு

குடும்பத்தினர்
077 606 2761
077 119 9309

(CR-40714)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 27 . 08 . 1942

மறைவு 08 . 09 . 2023

கடந்த (08.09.2023) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் ஆறுமுகம் சந்திரபோஸ்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.10.2023) கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் (08.10.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எம் அன்புத் தெய்வத்தின் பிரிவு செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும், மலர்வளையம் சாத்தியும், அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எம் இதயம் நெகிழ்ந்த நன்றிகளை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 26450) A-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 12 - 1938

மறைவு 28 - 09 - 2021

யாழ். கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர் இளையதம்பி இரத்தினசிங்கம்

(பப்பா - ஆச்சாரியார்)

ஆண்டிரண்டு போனாலும் அழியவில்லை உங்கள் நினைவு
அன்பின் உறைவிடமாகவும் பாசத்தின் சிகரமாகவும்
வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
எங்கள் ஆசை பப்பாவே எங்கு சென்றீர்கள்!

அன்பான எங்கள் அன்பு பப்பா! இறைவனிடம் நீங்கள் சென்று
ஈராண்டுகள் ஆகியதுவோ... உங்களை நினைக்கும் போது
வரும் கண்ணீரை நாங்கள் துடைத்தாலும்
எங்கள் இதயத்தின் வலி நிரந்தரமானது!


உங்களை இழந்து வாழும் எங்கள் வலி
காலத்தாலும் ஆற்றமுடியாதது உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்...
ஓம்சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (06.10.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

(cs.52379) (N.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 07 . 1940

மறைவு 05 . 10 . 2023

### கணபதிப்பிள்ளை துரைசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை துரைசிங்கம் அவர்கள் நேற்று (05.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திரரேகா அவர்களின் பாசமிகு கணவரும், சசிகரன் (கொலண்ட்), சசிரேகா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபால (நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), காமினி (கொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதுர்ஷன், கிருத்திகா (கொலண்ட்), சாயினி (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசையா, முருகேசு, றோஸ்மலர் மற்றும் இராசமலர், கனகம்மா, நாகராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முருகேசு, தம்பிமுத்து, ராணியம்மா, புஸ்பமலர், துரைசிங்கராசா, சிவமூர்த்தி, நேசமலர் மற்றும் சிவராசா, ராமச்சந்திரன், ரூபன், காந்திமதி, ரூபவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

உடுவில் மகளிர் கல்லூரி
மேற்கு வீதி, உடுவில்.

தகவல்: குடும்பத்தினர்.
0031615 481287 - மகன்
077 3880 608 - மருமகன்

(CR 40713) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொன்னாலை நாராயணன் அறக்கட்டளை மற்றும் சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை இணைந்து பொன்னாலையில் உள்ள விசேட தேவையுடைய 12 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும் ரூ. 5000 பணமும் ஆகியன அண்மையில் வழங்கப்பட்டன.
குரும்பசிட்டி முத்துமாரி அம்மன் அறக்கட்டளை மூலம் கனடா, டொரண்டோவில் உள்ள தம்பியப்பா அரவிந்தன் இதற்காக நிதியை வழங்கியிருந்தார். இதேவேளை மாதகல் நுணசை முருகன் ஆன்மீக அறக்கட்டளையும், சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையும் இணைந்து, நுணசை பகுதியில் உள்ள 3 கிராமங்களை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 61 குடும்பங்களுக்கு, உலருணவுப் பொருள்கள் வழங்கி வைத்தன. (ய-27)



ஏழாலை மேற்கு ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் 40 ஆவது ஆண்டு மாணிக்க விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் அண்மையில் ஏழாலை மேற்கு முத்தமிழ்மன்ற கலாசார மண்டபத்தில் சங்க உபசெயலாளர் இ.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் புத்தெழுச்சி எனும் தலைப்பில் மாணிக்க விழா மலர் வெளியிடப்பட்டது. (ய-66)



பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவால் கிளிநொச்சி மாவட்டச் செயலக மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள மொழி பாடநெறியின் நிறைவு நாள் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.
பயிற்சிநெறியின் கற்கை வெளிப்பாடுகளை உள்ளடக்கியதாக சிங்களப் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. (ய-113)



## காந்தியக்கொள்கை பயிற்சிப்பட்டறை

மகாத்மாகாந்தி ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் நடைமுறையில் காந்தியக்கொள்கை எனும் தலைப்பில் பயிற்சிப்பட்டறை த.நந்திவர்மன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. காந்தியம் பத்திரிகை ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி மூன்றாவது சக்தி எனும் தலைப்பில் உரையாற்றினார். (ய-159)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 07 - 02 - 1951



உதிர்வு 08 - 09 - 2023

கடந்த (08.09.2023) அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் ரேணுகா ஸ்ரீஸ்கந்தராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (06.10.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் எதிர்வரும் (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும், அன்னாரது மறைவின்போதும், இறுதிக்கிரியைகளின்போதும் உதவி புரிந்த அன்பர்களுக்கும், துயரில் பங்குகொள்ள வருகை தந்தோருக்கும், இணையவழி மூலமும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொட்டாவத்தை,
கல்வளை, சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்.

(CS 26502) A-1


# நீதிபதிக்கு விடுத்த அச்சுறுத்தல் தமிழினத்துக்கான அக்கிரமம்!

## வன்னி வலய சட்டத்தரணிகள் சங்கம் ஆவேசம்

முல்லைத்தீவு, ஒக். 6
நீதிபதிக்கு விடுக்கப்பட்ட உயிரச் சுறுத்தலானது இலங்கை நீதித் துறைக்கு மட்டுமல்ல சிறுபான்மை யின மக்களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையே. இதற்கெதிராக நாம் ஒன்றிணைந்து குரலெழுப்புவோம் - இவ்வாறு வன்னி வலய சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினரான பத்திநாதர் அன்ரன் புனிதநாயகம் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நீதிபதி சரவணராஜாவுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட மனி தச் சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவண ராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்- அழுத்தம் காரணமாக அவர் தனது பதவியைத் துறந்து சென்றுள்ளார்.
இலங்கையின் அனைத்து அரச நிறுவனங்களும் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படவேண்டும் என்ற கடும்போக்குவாதத்தையே இதன்மூலம் நிரூபித்துள்ளது.
இதனைக் கண்டித்து வடக்கு- கிழக்கு சட்டத்தரணிகள் போராட்டங்களில் ஈடுபட்டு வருவதுடன் கொழும்பு சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.
சுயாதீனமான சட்ட, நீதித்துறை யின் பாதுகாப்பை உறுதிசெய்ய நாம் ஒன்றிணைவோம்- என்றார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவிலகிய மாணவன் மீண்டும் பாடசாலைக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 6

பண்டத்தரிப்பில் பாடசாலைக்குச் செல்லாத மாணவனொருவன் மீளவும் பாடசாலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீளிணைக்கப் பட்டுள்ளார்.

கிராம அலுவலர், சிறுவர் பெண்கள் பிரிவு உத்தி யோகத்தர்கள் ஆகியோர் குறித்த மாணவன் பாடசாலைக்கு சமுகமளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

அதேவேளை, மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவது அதிகரித்துள்ள நிலையில், சண்டிலிப்பாயில் ஒழுங்கற்ற வரவைக் கொண்ட மாணவர்கள் தொடர்பிலும் கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச-66)

## கசிப்புடன் ஒருவர் காரைநகரில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 6

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காரைநகரில்கசிப்புவைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 40 லீற்றர் கசிப்பு மற்றும் 360 லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டன.

சந்தேகநபரை சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த ஊர்காவற்றுறைபொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26,125)

## இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாமாம்

கிளிநொச்சி கிராமப்பு றங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் என்று வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக சிலர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மாவட்டச் செயலகத்தின் ஊடாக வடமாகாண ஆளுநருக்கு மனுவொன்னையும் கையளித்தனர். போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவும், இலவச குடிதண்ணீர் சேவை உள்ளிட்ட திட்டங்களுக்காகவும் இராணுவம் இருக்க வேண்டும் வலியுறுத்தினார். (ம-113)



### The Tender Opening Date Postponed

The Advertisement for purchasing of generator published on 19.09.2023, by Regional Director of Health Services, Jaffna. The above tender opening date is postponed to 24.10.2023 at 10:30am at Regional Director of Health Services, Jaffna. Its bid security also to be extended up to 19.02.2024

**Chairperson**
**Regional Procurement committee**
**Regional Director of Health Service, Jaffna.**

(CR 40717)


### 03ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 06.10.1981 மறைவு: 10.10.2020

அமரர்

**லிங்கோற்பவநாதர் ரவிசங்கர்**

தவப்பலனின் தனித்துவமே
உன் 42ஆவது பிறந்தநாள் நினைவிலும்
நினைவகலா 3ஆம் ஆண்டு நிறைவிலும்
ஏங்கி நிற்கும்

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர். Southamton, UK.

(CS 26501) A-1


THE ROYAL COLLEGE OF JAFFNA
O/L, A/L பாடங்களில் "A" மதிப்பெண்களைப் பெற சிறுகுழுக்களாக வகுப்புகள் நடைபெறுகின்றன.
தொடர்பு: 077 675 1649
Kuberan Building, Chankanai Town

### வாடகைக்கு உண்டு

பழைய நம்பர் 179, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 3 ஸ்ரோர்ஸ் (40 X 12), 2 கடை (30 X 15)
பல்கலைக்கழக மாணவர்களுக்கான அறைகள் (ஆண்கள்) அபிகொலிடே விழாக்கு முன்பாக வாடகைக்கு உண்டு. (CCTV கமரா உண்டு)
பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு உண்டு.

077 863 1768

(cs.52369) (N.1)



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

### சாரதிகளுக்கான பதவி வெற்றிடங்கள்

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 32 நாடுகளில் பணியாற்றி வருகிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இப்பதவியின் அத்தியாவசிய சேவைகளாவன, பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும். அத்துடன் 2 வருடங்களுக்கு மேலாக சாரதி அனுபவமும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவைகளை எதிர்வரும் 10 ஒக்டோபர் 2023 செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்ரஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**

05.10.2023 (cs.52391) (N.1)



### வேலைவாய்ப்பு

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தக சாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) ஆகிய நிறுவனங்களிற்கு விற்பனையாளர் (ஆண், பெண்) இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 494 9683
077 077 6469



### வாகன ஓட்டுனர் தேவை

உடுவில் மகளிர் கல்லூரியின் ஆட்டோ, கார், பஸ் வாகனங்கள் ஓட்டுவதற்கு ஓட்டுனர் தேவை. எனவே தகுதியான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் காரியாலயத்திற்கு சமுகம் தரவும்.

இடம் : உடுவில் மகளிர் கல்லூரி அலுவலகம்
காலம் : 11.10.2023 புதன்கிழமை
மாலை 2.00pm - 5.00pm
12.10.2023 வியாழக்கிழமை
மாலை 2.00pm - 5.00pm

அதிபர்.

(cr 40715) (N-1)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி கனகம்மா சண்முகம்**

**(வெள்ளையம்மா)**



அளவில்லா கும்பிக்கு
அன்னமிட்ட அன்னையே,
வெள்ளையம்மா நாமம் தரித்த
எங்கள் தாயே...!

முகம் பார்த்து அகம் உணர்ந்து
ஆறுதல் மொழி கூறும்
அன்னைப் பெருங்கடலே

நீ பெற்றிடாத செல்வங்கள் தான்
எத்தனை..எத்தனை....
காலம் பறித்தெடுத்த
உன் பிள்ளைகளோடு
கலந்திட விரைந்தாயோ எம்
தாயே...!
உங்கள் நினைவு
எத்தனை காமைமானாலும்
எம்மை விட்டு அழியாது அம்மாவே!


மலர்வு 15.07.1940
உதிர்வு 06.10.2022

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
குடும்பத்தினர்

(cs 452390) (N.1)

### 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 . 01 . 1954



உதிர்வு 06 . 10 . 2013

**அமரர் சிதம்பரப்பிள்ளை கலாநிதி**

**(ஆங்கில ஆசிரியர்)**

திதி : துதியை (16.10.2023)

பத்து வருடங்கள் ஆகியும் - இன்றும்
பரிதவிக்கின்றோம் உங்களை எண்ணி
"கலாநிதி" வேண்டும் என்று
கதறுகின்றோம் குழந்தைகள் போல
அனைவருக்கும் உங்களைப் பிடிக்கும்
ஆண்டவனுக்கு என்ன விதிவிலக்கா?
ஆறாத ஏக்கங்களுடன் இறைவனை
ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் வாடும்...
பெரியமாவடி மற்றும் கிராம்புவில், சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

(CR 40718) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியவரிடம் நகைகள் கொள்ளை!

கிளிநொச்சி, ஒக். 6

முதியவர் ஒருவரை வாகனத்தில் கடத்திய குழுவொன்று அவர் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்ற நிலையில் அந்தக் குழு பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளது.

வீதியால் சென்ற முதியவர் மேற்படி வாகனத்தில் வந்தோரிடம் உதவி கேட்டு ஏறியுள்ளார். இதன் பின்னர் அந்த முதியவர் தான் இறங்க வேண்டிய இடத்தைத் தெரிவித்தபோதிலும், அவர்கள் அவரை இறக்காமல் கடத்திச் சென்றுள்ளனர். அதன் பின்னர் முதியவர் அணிந்திருந்த சங்கிலி, மோதிரம் உள்ளிட்ட தங்க நகைகளை அபகரித்துள்ளனர்.

இது தொடர்பில் பூநகரிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸார் மாங்குளம் மற்றும் வவுனியா பொலிஸாருக்குத் தகவலைத் தெரிவித்து வாகனத்தை வீதிச்சோதனை மேற்கொண்டு மடக்கிப் பிடித்தனர். வாகனத்தில் பயணித்த இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் நடைமுறைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-113)

## நாட்டைவிட்டு...

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் ஒரு தேசமாக பல்வேறு சவால்களுக்கும் நிலையற்ற தன்மைகளுக்கும் முகம்கொடுத்தோம். அதன் விளைவாக தங்களது இலக்குகளை அடைய பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் எண்ணத்துடன் இருக்கின்றனர். இலங்கை, இலகுவானதாக இல்லாவிட்டாலும் நிலையான ஒரு பொருளாதாரக் கொள்கையைத் தற்போது பின்பற்றுகிறது. அதனால், பணவீக்கத்தைக் குறைத்தவுடன் வருமான வழிமுறைகளை உருவாக்கவேண்டிய அவசியம் உள்ளது.

2024ஆம் ஆண்டு, எமது நாட்டின் பொருளார வளர்ச்சியை மீள ஆரம்பிப்பதற்கான ஆண்டாகும் என்பதோடு, நாடு பொருளாதாரச் சவால்களை எதிர்கொண்ட அனைத்துத்தருணங்களிலும் நாட்டின் வளர்ச்சிக்குப் பட்டதாரிகள் சமூகத்தினர் தங்களது பணியைச் சிறப்பாகச் செய்துள்ளனர். அடுத்த 10 வருடங்களுக்குள் பல்வேறு பொருளாதார மாற்றங்களை உலகம் சந்திக்கப் போகின்றது என்று கூறப்படுகிறது. கனடா மற்றும் ஐரோப்பா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. எதிர்காலம் தொடர்பில் நீங்கள் அவதானம் செலுத்தும்போது மேற்படி சவால்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும் - என்றார். (அ-ம)

## இடியன்...

சட்டவிரோதமான வகையில் துப்பாக்கிகள் தயாரிக்கப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் குறித்த வீட்டை முற்றுகையிட்டு நடத்திய தேடுதல் நடவடிக்கையிலேயே இந்தத் துப்பாக்கிகள் மீட்கப்பட்டன. 34 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (அ-ம-19)

## கன்னத்தில்...

தன்னை பெட்டை நாயெனத் தெரிவித்தார் என்று குற்றஞ்சாட்டி, சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்பி உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டயானா கமகே மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல நாட்டில் எங்கேயும் பெண்களை அவமதிக்கும் வகையில் செயற்படுவதற்கு இடமளிக்கப் போவதில்லை. பெண்களை யார் என்று நினைத்தீர்கள்? பெண்களை 'பெட்டை நாய்' என்று இந்தச் சபைக்குள் கூறமுடியாது. பெண்களிடம் கன்னத்தில் அறைவாங்கும் நாளில் புரியும்.

பெண்களை அவமதித்துப் பேசுவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னர் பல தடவைகள் இவ்வாறான மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் இந்தச் சபையில் இடம்பெற்றுள்ளன. தொடர்ந்தும் இதற்கு இடமளிக்கமுடியாது. பெண்களை மோசமாகப் பேசுபவர்களுக்கு என்னிடம் கன்னத்தில் அறைவாங்க நேரிடும் - என்றார்.

இதையடுத்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் இராஜாங்க அமைச்சருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. (அ-ம)

## தவணை...

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்தரப் பரீட்சைகள் நடத்தப்படும் நாள்கள் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஜனவரி 4 முதல் 31ஆம் திகதி வரையில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. இதன்படி யாரேனும் விண்ணப்பிக்க இருந்தால் அவர்களுக்கு 3 நாள்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளன. இணையவழி மூலம் விண்ணப்பிக்க முடியும். பரீட்சை தொடர்பான கால அட்டவணை அடுத்த வாரமளவில் வெளியிடப்படும்.

அத்துடன் பாடசாலை விடுமுறை இம்முறை டிசெம்பர் 22ஆம் திகதியளவில் வழங்கப்படலாம். ஆரம்பப் பிரிவுகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். பரீட்சை முடிவடைந்த பின்னர் மற்றைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கல்வி அமைச்சால் விரைவில் வெளியிடப்படும் - என்றார். (அ-ம)

## தலைமன்னார்...

அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று துறைமுகங்கள் மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. தலைமன்னாரில் ஏற்கனவே காணப்பட்ட இறங்குதுறை உபகரணங்கள் மற்றும் பகுதிகள் அழிவடைந்துள்ளன. அவை திருத்தப்படவேண்டும். தேவையான உபகரணங்கள் தற்போது அங்கு கொண்டு செல்லப்படுகின்றன. சுமார் ஆறு மாதங்களில் அந்த நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்யமுடியும். இந்தத் திட்டத்துக்காக எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் 600 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு பரிந்துரைக்கவுள்ளேன். அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி நான் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளேன். அங்கு கப்பல்துறை அதிகாரசபை உள்ளிட்ட அதிகாரிகளுடன் அது தொடர்பில் பேச்சு நடத்துவேன். இந்த கப்பல் சேவையை நடத்துவதில் அங்குள்ள தரப்பினரும் தயாராக வேண்டியுள்ளது. விரைவில் அனைத்து ஏற்பாடுகளும் முழுமையாகும் - என்றார். (அ-ம-44)

## ஒரு...

நாயைக் கடத்திக் கட்டிவைத்து பராமரித்ததாக அயலவர் மீது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் அவரது சட்டத்தரணி, 'இந்த வழக்குடன் தொடர்புடைய நாயை குற்றஞ்சாட்டப்பட்டவரே வளர்த்து வந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன் அயல் வீட்டில் உள்ள அதே இன நாயுடன் இன விருத்திக்காக சேர்க்கப்பட்டது. அதன் பின் சில நாள்களில் குற்றஞ்சாட்டப்பட்டவரது வளர்ப்பு நாயைக் காணவில்லை. இந்த நிலையிலேயே கடந்த சில தினங்களுக்கு அவரது நாய் வீடுதேடி வந்துள்ளது. அதன் பின் ஆராய்ந்தபோது, அயலவர் குறித்த நாயை வேறு ஓர் இடத்தில் வசிக்கும் தனது மகளின் வீட்டுக்கு அழைத்துச் சென்று வளர்த்துள்ளார். அவரது மகள் தூரப் பயணம் செய்வதனால் குறித்த நாயை சில நாள்களுக்கு முன் அழைத்து வந்து பெற்றோரின் வீட்டில் விட்டுச் சென்றுள்ளார்.

அதனாலேயே தன்னை வளர்த்தவர் வீட்டுக்கு நாய் மீண்டும் வந்துள்ளது. அதனையே அயலவர் தனது நாய் என்று உரிமை கோருகிறார். இந்த நாயின் பரம்பரையுள்ள பெண் நாய் ஒன்று தற்போதும் உள்ளது. அதனது மரபணுவையும் இந்த நாயினது மரபணுவையும் பரிசோதனை செய்ய கட்டளையாக்கவேண்டும்' என்றவாறாக சட்டத்தரணி சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அதனை ஆராய்ந்த மன்று கிளிநொச்சி மாவட்ட விலங்கியல் மருத்துவ அதிகாரி ஊடாக இரண்டு நாய்களதும் மரபணுவைப் பரிசோதனை செய்து அறிக்கையிடுமாறு கட்டளையிட்டது. (அ-ம-26)

## ஷோம்பி...

மருத்துவர் விராஜ் பெரேரா ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். 'இலங்கையில் ஷோம்பி போதைப் பொருள் உடுருவியுள்ளது. இது சமூக மட்டத்தில் எவ்வளவு தீவிரமாக ஊடுருவியுள்ளது என்பது எவருக்கும் தெரியாது. நாட்டை ஆள்பவர்களுக்கும் சட்டத்தை இயற்றுபவர்களுக்கும் இது தொடர்பில் எந்த அக்கறையுமில்லை. அவர்கள் போதைப்பொருள்கள் மூலம் அதீதமான வருவாயை ஈட்டுவதால் இது தொடர்பில் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் உள்ளனர்' - என்றார்.

கொக்கெய்ன் மற்றும் ஹெரோய்னை விடவும் பல மடங்கு ஆபத்தான - போதையை ஏற்படுத்துகின்ற 'ஷோம்பி' போதைப்பொருள் அமெரிக்காவின் பிடடெல்பியா, நியூயோர்க் நகரங்களில் தீவிரமாகப் பரவியுள்ளது. இதன் பிற்பாடு தென்அமெரிக்க நகரங்களிலும் ஆபிரிக்காவில் சில பகுதிகளிலும் 'ஷோம்பி போதைப்பொருள்' பரவ ஆரம்பித்தது.

மனிதர்கள் உயிருடன் இருக்கும் அதே நேரம், அவர்கள் தாம் செய்வது இன்னது என்று தெரியாமல் நடைபிணங்களாக அலைந்து திரியும் நிலையே 'ஷோம்பி' என்று அறியப்படுகின்றது.

மேற்படி போதைப்பொருளை ஒருவர் எடுத்துக்கொண்டால் அந்த நபர் 'நடைப் பிணமாக' அலைந்து திரிய ஆரம்பிப்பார். எதிரில் எவர் நிற்கின்றனர் என்பது தொடக்கம் வீதியில் வரும் வாகனங்கள் வரை அவருக்கு எதுவும் தெரியாது. அத்துடன் அந்த நபரின் உடலுறுப்புக்களும் கொஞ்சம்கொஞ்சமாக அழுக ஆரம்பிக்கும். இவ்வாறான அதி அபாயமான 'ஷோம்பி போதைப்பொருளே' தற்போது இலங்கைக்குள் ஊடுருவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பொருள்களின்...

கப்படலாம் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணய நிதியத்தின், இலங்கை குறித்த ஆய்வு ஒக்ரோபர் மாதத்துக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் அதற்கு சமாந்திரமாக இடம்பெறும். கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் இந்தியா, பாரிஸ்கிளப், சீனா ஆகிய நாடுகள் பெரும் ஆதரவை வழங்கியுள்ளன. சில விடயங்களுக்குத் தீர்வைக் கண்டதும் பணியாளர் மட்ட உடன்பாடு சாத்தியமாகலாம். நிதியமைச்சு சில வரிகளை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் சில பொருள்களின் விலைகளும் அதிகரிக்கலாம் - என்றார். (அ-ம)

## வட்டி வீதம்...

மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்களில், வைப்பிலிடும் தொகைக்கு 10 வீதமாகவும் கடன்களுக்கு 11 வீதமாகவும் வட்டி இருக்கும். மத்திய வங்கி வட்டி வீதங்களைக் குறைத்துள்ள காரணத்தால் வர்த்தக வங்கிகளும் வட்டி வீதங்களைக் குறைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

## வெளிநாட்டு...

படுத்தமாட்டோம் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரண்டு வழிகள்தான் உள்ளன. ஒன்று பல்கலைக்கழகங்களில் மருத்துவபீடங்களை அதிகரிப்பது. மற்றையது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தவர்களுக்கு நியமனம் வழங்குவது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மருத்துவப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த 3 ஆயிரம் பேர் இலங்கை மருத்துவ சபையின் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளனர் - என்றார்.

இதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல, தெற்காசிய மருத்துவத் தொழில்நுட்பக் கல்லூரி (தனியார் மருத்துவக்கல்லூரி) தற்போது மருத்துவபீடங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டு வருகிறது. ஆனால் இந்தக் கல்லூரிக்கு எதிராக உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்னமும் நடைமுறையில் உள்ளது - என்று சுட்டிக்காட்டினார். (அ-ம-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதியற்ற நாடே இலங்கை சர்வதேசம் உணர வேண்டும்

## வடக்கு - கிழக்கு காணாமலாக்கப்பட்ட உறவுகள் சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஒக். 6**

**நீதிபதிக்கே நீதிகோரும் நாடாகியுள்ளது இலங்கை. பெரும்பான்மையின ருக்கு ஒரு நீதியும் சிறுபான்மையினருக்கு ஒரு நீதியையும் திணிக்க அரா ஜகத் தரப்பு முனைகிறது. இனியும் சர்வதேசம் மௌனம் காக்காது சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்தவேண்டும்.**


-இவ்வாறு யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கச் செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முல்லைத்தீவு நீதிபதி சரவணராஜா பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியமைமூலம் இலங்கை நீதி இல்லாத நாடு என்பது நிரூபணம் ஆகிவிட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்தொடர்ச்சியாகவெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும்ஜெனிவாவுக்கும் உள்நாட்டு நீதி பொறிமுறையில் எமக்கு நம்பிக்கை இல்லை என்றே கூறி வருகின்றார்கள். உள்நாட்டு நீதிப் பொறிமுறையில் நம்பிக்கை இல்லை என்பதற்கு நீதிபதிக்கே விடுத்த அச்சுறுத்தல் தக்கசான்றாகும்.

நீதிபதிக்கே நியாயம் கேட்டு வடக்கு - கிழக்கு தமிழர் போராடும் நிலை தொடர்பில் சர்வதேசம் கருத்தில் எடுக்கவேண்டும்.

சர்வதேசம் இனியும் மௌனம் காக்காமல் இலங்கை அரசுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்- என்றார். (ச-125)



# மோட்டார்சைக்கிள் தீவைத்து எரிப்பு!

**கிளிநொச்சி, ஒக். 6**

வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் பின்னிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன் குறித்த மர்மக் குழுவால் வீட்டின் மீதும் சரமாரியான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-113)


**தவறவிடப்பட்டுள்ளது**

இராஜேந்திரன் டினுஷன் ஆகிய எனது தே.அ.அ.சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அடையாள அட்டை, வாகன வரி பத்திரம் என்பனவும் ஒரு தொகைப்பணமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 666 0573
077 480 2905


### கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில்

# சம்பியனாகத் தெரிவானது பருத்தித்துறை முனை அணி



யாழ். மாவட்ட ரீதியாக அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே பருத்தித்துறை கோல்டன் பிளஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பருத்தித்துறை முனை அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியுள்ளது.

பருத்தித்துறை கல்லூரி வீதியில் உள்ள கோல்டன் பிளஸ் விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட லீக் ஆட்டங்களில் வெற்றிபெற்று முதல் நான்கு இடங்களை பெற்ற வரணி ஜெயந்தன் வி.க. அணி, பருத்தித்துறை முனை வி.க. அணி, சாவற்கட்டு பிள்ளையார் வி.க. அணி, மாலுசந்தி மைக்கல் வி.க. அணி என்பன அரையிறுதி ஆட்டங்களில் மோதின.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்ற பருத்தித்துறை முனை வி.க. அணி மற்றும் மாலுசந்தி மைக்கல் வி.க. அணிகள் மோதிய இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இரு அணிகளும் சம புள்ளிகளை பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. எனினும் பருத்தித்துறை முனை வி.க. அணிபக்கம் இருந்த அடிப்படையில் அந்த அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

முதல் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை முனை வி.க. அணிக்கு 15 ஆயிரம் ரூபா பணப் பரிசு மற்றும் வெற்றிக் கேடயமும், 2ஆம் இடத்தை பெற்ற மாலுசந்தி மைக்கல் வி.க. அணிக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசு மற்றும் வெற்றிக் கேடயமும், 3ஆவது இடத்தைப் பெற்ற வரணி ஜெயந்தன் வி.க. அணிக்கு 5 ஆயிரம் ரூபா பணப்பரிசு மற்றும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டன. (எ-100)


**சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்**

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, பவர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், றமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை (07.10.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு இச் சேவை ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் இடம்பெறும் மேலும் எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள்

ஆர்க் என்ரபிறைசஸ் A9, வீதி, பரந்தன் சந்தி.

தொடர்பு: 021 228 2020, 071 535 7800


# கொல்லங்கிராய் மயானத்தில் கொட்டப்படும் குப்பைகளும்!

## மக்கள் அசௌகரியம்

**யாழ்ப்பாணம், ஒக். 6**

சாவகச்சேரி நகரசபைக்குச் சொந்தமான நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் இந்து மயானத்தில் இனந்தெரியாதோர் கழிவுகளை கொட்டிவிட்டுச் செல்வதால் அசௌகரியங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

நுணாவில் மேற்கு தேவாலய வீதியிலிருந்து தென்மராட்சி தெற்குப் பிரதேசத்துக்குச் செல்லும் வயல் வீதிக்கு அண்மையில் இந்த மயானம் உள்ளது.

அண்மைக்காலமாக இனந்தெரியாதோர் இரவு வேளைகளில் வாகனங்களில் கொண்டு வரும் குப்பைகளை இந்த மயானவளாகத்தில் கொட்டிவிட்டுச் செல்கின்றனர். இதனால் மயான வளாகத்தில் குப்பைகள் நிறைந்து காணப்படுவதுடன் இந்தக் கழிவுகள் காற்றுடன் அள்ளுண்டு வயல்களுக்கும் பரவுகின்றன.

இதனால் எழும் துர்நாற்றத்தால் வீதியால் செல்வோர், விவசாயிகள் எனப் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. எனவே உரிய தரப்பினர் இதுதொடர்பில் கவனம் செலுத்தி குப்பை கொட்டுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-9)


**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.**

- 33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவாக கோழிகள், முட்டைகள் தொகையாய் இவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- 24 மணிநேர சேவை (இரவு / பகல்)
- சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்
- கோழி வியாபாரிகளுக்கும் ஹொட்டல் தேவைகளுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.
- புறோயில் 1 kg - 650/- சுத்தம் செய்யப்பட்டது 1000/- மொத்தமாக 900/-
- கல்பேட் பேரன்ஸ் 1kg /- 750/- சுத்தம் செய்யப்பட்டது 1100 /- மொத்தமாக 1000/-
- மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு யாழ். மாவட்டம் முழுவதும் ரான்ஸ்போட் இலவசம்.

தொடர்பு:- நியூ சிற்றி கோழி பண்ணை
நியூ சிற்றி கோழிக்கடை

இல. 08, சின்னக்கடை மீன் மாக்கற், குருநகர், யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.